செ.வெ.எண்: 24 / ஜீன் / 2021 நாள்: 07.06.2021

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள வீடற்ற ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கிட நிலஎடுப்பு செய்யும் திட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

------------

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வீடற்ற ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு இலவச வீட்டு மனை வழங்கிட நிலஎடுப்பு செய்யும் திட்டத்தினை ஒவ்வொரு ஆண்டும் அரசு சிறப்பு கவனத்துடன் செயல்படுத்தி வருகிறது.

2021-2022 ஆம் ஆண்டிற்கு நிலமற்ற, வீடற்ற ஏழை ஆதிதிராவிடர் இன மக்கள் பயன் பெறும் வகையில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட ஏதுவாக தனியார் பேச்சு வார்த்தை மூலம் நிலம் கையகம் செய்யப்பட உள்ளதால் நிலம் வழங்க விருப்பம் உள்ள நில உரிமையாளர்கள் அரசு நிர்ணயிக்கும் விலைக்கு நிலத்தை தர முன்வரும் நேர்வுகளில் நிலம் தொடர்பான ஆவணங்களுடன் திருச்சிராப்பள்ளி, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரை தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**